**<u>நீ தி த் து றை நடு வர் எண் .1நீ தி மன் றம் , இராமநாதபுரம்</u>**

**முன்னிலை : திரு. N.நிலவேஸ்வரன் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**

<u>CIS. Crl.M.P.No. 122/2026</u>

<u>CNR No. TNRM 02- 000322-2026</u>

உமர் பாரூக், வயது 58/2026
த/பெ. காதர்சுல்தான்,
4/411, பள்ளிவாசல் தெரு,
புல்லங்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

. . . மனுதாரர்/அபிடவிட்டார்

-- எதிர் --

1. அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
   தேவிப்பட்டிணம் காவல் நிலையம்,
   இராமநாதபுரம்
   குற்ற எண்.85/2025

2. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
   வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
   இராமநாதபுரம்.

3. உதவி இயக்குநர் அவர்கள்,
   கனிமவள பாதுகாப்பு அலுவலகம்,
   இராமநாதபுரம்.

4. வட்டாட்சியர் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   இராமநாதபுரம்.

5. Shrinithi Capital Private Limited,
2nd floor,
2A Mookambika complex,
No.4, Lady desika Road,
Mylapore,
Chennai – 600 004.

... எதிர்மனுதாரர்கள் / அரசு
குற்றமுறையிடுபவர்

மனுதாரர்/அபிடவிட்டார் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 30.01.2026–ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/அபிடவிட்டார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/அரசு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5ஆம் எதிர்மனுதாரர்களுக்கு இம்மனு குறித்து முறையான அறிவிப்பு அனுப்பபட்ட பிறகும் அவர்கள் தரப்பில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ எத்தகைய எடுத்துரைப்பும் செய்யாத நிலையிலும் மேற்படி, இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உ த் த ர வு

இம்மனுவானது தேவிப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண்.85/2025–ல், சட்டப்பிரிவுகள் U/S. 303(2) BNS, 21(1) Mines and Minerals (Development & Regulation) Act 1957– ன் கீழான வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான TN 50 AU 8957 என்ற பதிவெண் கொண்ட டிரைலர் வாகனம் மற்றும் பதிவெண் இல்லாத சிவப்பு நிற M.F 241 டிராக்டர் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்குச்சொத்தினை ஒப்படைத்து, இடைக்கால பொறுப்பில் வழங்ககோரி இம்மனு மனுதாரர்/அபிடவிட்டார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்/அபிடவிட்டார் மனு மற்றும் வாதம் :–</u>

மனுதாரர்/அபிடவிட்டார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும், அவிடவிட்டார் தரப்பு வழக்கறிஞர் வாதத்திலும் வழக்கு சொத்தான TN 50 AU 8957 என்ற பதிவெண் கொண்ட டிரைலர் வாகனம் மற்றும் பதிவெண் இல்லாத சிவப்பு நிற M.F 241 டிராக்டர் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும் என்றும், மேற்படி குற்றமுறையீட்டாளரால் கடந்த 20.03.2025ம் தேதியன்று சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு அன்றே தனக்குச் சொந்தமான வாகனத்தை பறிமுதல் செய்து, தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றும், தனக்குச் சொந்தமான Tractor, Trailor, Registration No: TN 50 AU 8957 என்ற வாகனத்தை குற்றமுறையீட்டாளரால் பறிமுதல் செய்தார்கள் என்றும், மேற்படி வாகனம் தனக்குச் சொந்தமான வாகனமாகும் என்றும், மேற்படி குற்றமுறையீட்டாளரால் மணல் திருடியதற்காக பயன்படுத்தப்பட்டதாக கூறி கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தனக்கும் மேற்படி சம்பவத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும், தற்பொழுது தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் குற்றமுறையீட்டாளரால் கைப்பற்றப்பட்டு மேற்படி காவல் நிலையத்தினரால் மேற்படி வாகனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாமல் காவல் நிலையத்திலேயே பராமரிப்பின்றி இருந்து வருவதாலும் தற்போது தனக்குச்சொந்தமான வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் போய்விட வாய்ப்புள்ளது என்றும், எனவே தனக்குச் சொந்தமான மேற்படி Tractor, Trailor தன்னிடம் ஒப்படைக்க வேண்டியது மிகவும் அவசியமும் நியாயமுமாய் இருக்கிறது என்றும், இல்லாது போனால் தனக்குச் சொந்தமான வாகனத்தினை பயன்படுத்த முடியாமல் மிகுந்த கஷ்ட நஷ்டத்திற்கு விவசாயிகள் ஆளாகிவிடுவார்கள் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் ஆகிய தான் குற்வாளி அல்ல அசல் ஆவணம் நிதி நிறுவனத்திடமிருந்து வருகிறது என்றும், மேற்படி Tractor, Trailor தன்னிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் அதற்கு தேவையான உரிய ஜாமீன் வழங்கவும் சமூகம் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதி அளிக்கிறேன் என்றும், மேலும் வாகனத்தின் தோற்றங்களை மாற்றம் செய்யமாட்டேன் என்றும் நீதிமன்றம் திரும்ப ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கும்பட்சத்தில் அதனை திரும்ப நீதிமன்றத்தில் ஒப்படைப்பேன் என்று

உறுதி அளிப்பதாகவும், எனவே மேற்படி வழக்குச்சொத்தினை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்பு மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**1 ஆம் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் மற்றும் வாதம்:–**

இந்த மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் 1 ஆம் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பில் அறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலுரையில் மேற்படி மனுதாரரிடம் வழக்குச் சொத்துக்களை திரும்ப ஒப்படைத்தால் இது போன்ற மணல் திருட்டு குற்றச்சம்பவங்களுக்கு வாகனங்களை பயன்படுத்த கூடும் என்பதாலும், வாகனத்தின் பாகங்களை மாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், வழக்குச்சொத்துக்களை மனுதாரர் வசம் திரும்ப ஒப்படைக்க ஆட்சேபனை அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2 முதல் 5 ம் எதிர்மனுதாரர்களின் பதிலுரை மற்றும் வாதம் :**

2 முதல் 5 ஆம் எதிர்மனுதாரர்களுக்கு இம்மனு குறித்து முறையான அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகும் அவர்கள் தரப்பில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ எத்தகைய எடுத்துரைப்பும் எடுத்துரைக்கவில்லை.

**தீர்வு :–**

இம்மனுவில் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் வாதம் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எத்தகைய பதிலுரையும் வாதமும் எடுத்துரைக்கவில்லை. மேலும், மேற்படி மனுதாரர் தரப்பு ஆவணமான மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆர்.சி.புக் நகலினை பரிசீலனை செய்கையில் அதில் வாகனத்தின் உரிமையாளரான மனுதாரரின் பெயர் இடம்பெற்றுள்ளது. இதை மறுத்து அதாவது, மனுதாரரின் உரிமைத்தன்மை பற்றி ஆட்சேபித்து எத்தகைய பதிலுரையும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்காத நிலையினை கருத்தில் கொண்டும், வழக்குச்சொத்தான TN 50 AU 8957 என்ற பதிவெண் கொண்ட டிரைலர் வாகனம் மற்றும் பதிவெண் இல்லாத சிவப்பு நிற M.F 241 டிராக்டரின் உரிமையாளர் மனுதாரர்தான் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே வழக்குச்சொத்தான வாகனத்தின் உரிமையாளர் இம்மனுதாரர் தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்விதம், வழக்குச் சொத்தானது

மனுதாரருக்கு சொந்தமானது என்பதை அறிய முடிகிறது.

மேற்படி வழக்குச்சொத்தானது பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் இயற்கை சீற்றங்களால் அதன் பாகங்கள் துருப்பிடித்து செயலிலக்கக்கூடும் என்பதாலும், வாகனத்தின் மதிப்பு குறைவதற்கு வாய்ப்புள்ளது என்பதாலும், மேலும் அரசு தரப்பில் அரசுடமையாக்கப்படும் நடவடிக்கை குறித்து எதுவும் தெரிவிக்காததை கருத்தில்கொண்டும் மேற்படி வழக்குச்சொத்தினை அதன் உரிமையாளர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே, மேற்காணும் பரிசீலனைகளின் அடிப்படையில் மனுதாரர் வசம் வழக்குச்சொத்தினை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது

**<u>நிபந்தனைகள்</u>**

1. காவல் துறையினர் மேற்படி வழக்குச்சொத்தானது TN 50 AU 8957 என்ற பதிவெண் கொண்ட டிரைலர் வாகனம் மற்றும் பதிவெண் இல்லாத சிவப்பு நிற M.F 241 டிராக்டர் இந்நீதிமன்றத்தில் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர் ரூ. 6,00,000/க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

3. மேலும், மனுதாரர் தனக்காக இரு நபரும், தலா ரூ.10,000/– பிணை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

4. மேலும், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தினை 5ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றவுடன் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். தற்போது இது குறித்த நிரூபண அபிடவிட் தாக்கல் செய்யவேண்டும்.

5. மேற்படி வழக்குச்சொத்தானது நான்கு பக்கமும், நன்கு தெரியும் வகையில் அதனுடைய போட்டோ, குறுந்தட்டு மற்றும் பஞ்சநாமா தாக்கல் செய்ய வேண்டும்.

6. மேற்படி வழக்குச்சொத்தினை உருமாற்றமோ, விற்பனையோ செய்யக்கூடாது.

7. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு கோரும் போது, மேற்படி விசாரணைக்கு ஒப்படைத்து ஒத்துழைப்பு தர வேண்டும்.

8. நீதிமன்றம் கோரும்போது மேற்படி வழக்குச்சொத்தினை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவேண்டும்.

இன்று 2026–ஆம் ஆண்டு மாாச் திங்கள் 11–ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.11 17:31:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.